# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

**சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்**

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
## அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

**கார்த்திகை மாத வெளியீடு**
**(December 2012)**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**

www.gurudevar.org Email: indhuism@gmail.com

*இந்த ஆண்டு கார்த்திகை மாத இதழில் ஐயன், ஐயா, ஐயர், ஐயப்பன், ஐயனார் ஆகிய வழிபடுநிலையினரைப் பற்றிய விளக்கங்களைத் தரும் குருதேவரின் கட்டுரைகளை வெளியிடுகிறோம். சபரிமலை ஐயப்பன் கோயில் எல்லோரும் அறிந்ததாகிடும் போது, ஊருக்கு ஊர் உள்ள ஐயனார் கோயில்கள் மிகச் சிலரால் மட்டுமே வழிபடப்படுகின்றன. இந்த இதழில் உள்ள கட்டுரைகளில் உள்ள விளக்கங்கள் படிப்போருக்கு ஐயப்பன் வழிபாட்டைப் பற்றிய உண்மையை உணர்த்திடும். உணர்ந்தவர்கள் தவறான பாதையில் போகும் சமுதாயத்தினரைப் பார்த்து மயங்காமல், குருதேவர் காட்டிய வழியில் நின்று செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.*

# உள்ளுறை


1. ஐயப்பன் சிறப்பு மலர் - வணக்கவுரை

2. எத்தனை ஐயப்பன்கள் - சபரிமலையில் சமாது கொண்ட அருள்மிகு ஐயப்ப பண்டாரம்.

3. ஐயப்பனும் ஐயனார்களும்

4. சித்தியெல்லாம் தரும் ஐயப்பன் காயந்திரிகள் - முன்னுரை

5. மனுநீதி நூல்களின் சிறப்பும் ஐயப்பன் விரத பூசையும்.

6. இந்துவேத நூல்களின் சிறப்பும் ஐயப்பனும்

7. இந்துமத நூல்களின் சிறப்பு

8. இந்துவேத வீழ்ச்சியே ஐயப்ப வழிபாட்டின் வீழ்ச்சி! அதுவே இந்துக்களின் தாழ்ச்சி!

9. ஐயப்பன் கூட்டு வழிபாடு.

# ஐயப்பன் சிறப்பு மலர்

### வணக்கவுரை

1) சபரிமலையிலுள்ள ஐயப்பன் பற்றிய வரலாறு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதிவரும் குருபாரம்பரியம் (Religious History), அரசபாரம்பரியம் (Political History), இலக்கிய பாரம்பரியம் (History of The Tamil Language and Literature) என்ற மூன்றின் செய்திகளின் அடிப்படையில் பலநூறு பக்கங்களுக்கு ஏற்கனவே [முப்பதாண்டுகளுக்கு முன்பு இ.ம.இ.யின் பாரம்பரியத் தலைவராக, இரண்டாவதாகப் பொறுப்பேற்ற சித்தர் காகபுசுண்டர் (காக்கையர்), காக்காவழியன் பண்ணையாடி ம.பழனிச்சாமி பிள்ளை எழுதி யுள்ளார்.] எழுதப் பட்டுள்ளது. அதாவது இன்றுள்ள ஐயப்பனின் உலோகச் சிலை (The Metal Idol) அருளேற்றப்பட்ட (1954-1956) வரலாறு எழுதப் பட்டது.

இன்று இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், குருதேவர், இந்து மத மறுமலர்ச்சிக்காகச் ‘சித்தர் இராமாயணம்’, ‘சித்தர் மகாபாரதம்’, ‘சித்தர் சிவபுராணம்’, ‘சித்தர் முருகபுராணம்’, ‘சித்தர் மேரு புராணம்’ … முதலியவைகளை வெளியிடும் பணியைத் துவக்கி யுள்ளார்கள்.

சித்தர் இராமாயணத்தில் இராமன் மனைவியைப் பிரிந்து மேற்குத் தொடர்ச்சி மலை வழியாகச் சென்ற போது பல அருளூற்றுக்களை உண்டாக்கினான். நீலமலை, கோடைமலை, பெரியகுளம், சோத்துப் பாதை, அக மலை, சொர்க்கம், தேவிகுளம், … முதலியவை இராமனால் உருவாகிட்ட அருளூற்றுக்கள். இராமன் சபரியின் பணிவிடைகளை ஏற்று, அவள் வழங்கிய கனிகளை உண்டதால் விளைந்த பொருமைத் தீயின் வடிவமாக எழுந்த யக்ஞத் தீயில் சபரி கருகி சாம்பலாக்கப் பட்டாள். இராமன் இம் மலைப்பகுதிக்கே அவளின் பெயரைச் சூட்டினான்.

பல காரணங்களால் இராவணப் போர் முடிந்து அயோத்திக்கு மலர் விமானத்தில் திரும்பும்பொழுது சபரிமலையில் தங்கினான். மீண்டும் அயோத்தியில் சீதையைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு தனிமைத் தீயில் வாடும்போது, இச் சபரிமலைக்கு வந்து சபரியின் தம்பி **(பதினொருவது குழந்தையாகப் பிறந்தவன்; சபரியின் தம்பி**

**ஐயப்பன்)** அருவுருவச் சித்தி பெற்று வெட்ட வெளிக் கருவறையில் எழுந்தருளி "அருட்பெருஞ்சோதி ஆலயம்" உருவாகிய திருவிழாவில் மூன்ருவது முறையாகப் பங்கு பெற்ருன்.

இப்படி இராமாயணக் காலத்தில் திரேதகாயுகக் கடைசியில் உருவானதுதான் சபரிமலை ஐயப்பன் ஆலயம்.

இராமனுக்குப் பிறகு சில ஆயிரம் ஆண்டுகள் + துவாபர யுகம் 8,64,000 + கலியுகம் 5,087 = 8,69,087 + யக்ஞவல்லியின் குறிப்பின்படி 'திரேதகாயுக நாயகனுன தனக்குப் பின் நூறு சத்தியாண்டுகள் கழித்து; உலகம் முடிந்து கருவூரரின் (சந்திர குலம்) திங்கட் குலச் செல்வன் கண்ணன் தோன்றி இந்து மறுமலர்ச்சியும்; அருளாட்சியை மீளுட்சியும் செய்வாள்' என்பதற் கேற்ப 243 x 100 = 2,43,000 ஆண்டுகள் இராமனுக்குப் பிறகு திரேதகாயுகம் நீடித்திருக்க வேண்டும். எனவே, சபரி மலை ஐயப்பன் தோன்றி 8,69,087 + 2,43,000 = 11,12,987 பதினேரு இலட்சத்து பன்னிரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தேழு ஆண்டுகளாகின்றன, இன்று 1986 சனவரித் திங்கள் வரை.

எனவே, இன்று 1986 சனவரித் திங்கள் வரை கணக்குப் போடும்போது சபரி மலை என்று ஓர் அருளூற்று, அருட்பெருஞ் சோதி ஆலயம் வெட்டவெளிக் கருவறை பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட்கோட்டம் உருவாகி 11,12,987 ஆண்டுகளாகின்றன. இதன் வழிபாடுதான் இன்றைக்கு 'இந்து மத விழிச்சிப் பேரணியாக, எழுச்சிப் பேரணியாக, செழுச்சிப் பேரணியாக அமைந்து விடுகின்றது! வாழ்க ஐயப்பன் வழிபாடு.

(2) இம் மண்ணுலகின் பயிரினங்களும், உயிரினங்களும் பண்பட்டு உயர்வுற்று, உய்வடைவ-தற்காகவே அண்டபேரண்டம் ஆளும் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் தங்களின் தாய்மொழியான அமுதத் தமிழில் இந்துமதம் என்கிற 'சித்தர் நெறி'யை வழங்கினுர்கள். இது இந்துமதம் காலப்போக்கில் அடையக் கூடிய தளர்ச்சி பழுது தேக்கம் நலிவு மெலிவு ... முதலியவைகளை அகற்றுவதற்காக மூலப் பதினெண்சித்தர்கள் **'மானுட இனத்தின் ஆயுட்காலமாகிய 48**

**இலட்சம் ஆண்டுகளுக்குள் நாற்பத்தெட்டு (48) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகின்ற 'அருளுலக மறுமலர்ச்சித் திட்டத்'**தை வகுத்துச் சென்றுர்கள்.

(3) இதன்படி கடந்த 43,73,086 ஆண்டுகளில் வாழையடி வாழையாகத் தோன்றி வரும் 'பதினெண்சித்தர் பீடத்தின் "ஞானவேந்தராக" அருட் பேரரசராகத் தோன்றிச் செயல்படும் அருளாட்சி நாயகம், குவலய குருகுல பீடாதிபதி, குருதேவர், ஞானத் தந்தை, ஞாஞச்சாரியார், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர், இந்துமதத் தந்தை அவர்கள் இந்து மத மறுமலர்ச்சிப் பணியில் தமது திருக்கூட்டத் தாருடன் ஈடுபட்டுள்ளார்.

எனவே, இவர் இந்துமதத்தி லுள்ள அனைத்து வகையான இருள்களேயும், இழிவுகளேயும், பழிகளேயும், அழிவுகளேயும், இழப்புகளேயும், இடுக்கண்களேயும், கறைகளேயும், குறைகளேயும், ஆபாசங்களேயும், காட்டுமிராண்டித் -தனமான கதைகளேயும், கற்பனைகளேயும், தேவையற்ற சடங்குகளேயும், பயனற்ற பழக்கங்களேயும், தன்னல வெறியர்களின் சூழ்ச்சிகளேயும், சுரண்டல்களேயும், காலப்போக்கில் உருவாகி விட்ட மூடநம்பிக்கை களேயும், ஏக்கங்களேயும், ஏமாற்றங்களேயும், அவலங்களேயும், கேவலங்களேயும், ... முழுமையாக அகற்றும் பணியில் ஈடு பட்டுள்ளார்கள்.

(4) இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் தாம் ஈடுபட்டுள்ள பணி அணி பெறுவதற்காகவே; கி.பி. 1772இல் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளே தோற்றுவித்த இ.ம.இ., அ.வி.தி. முதலிய நிறுவனங்களேயும் அவற்றின் கீழ் பல நிறுவனங் களேயும் உருவாக்கி அருளாட்சிப் பணியைத் துவக்கி யுள்ளார். இப்பணிக்கு ஊர்தோறும் பல கிளே நிலேயங்களே அமைத்தும், ஆயிரமாயிரம் அடியான்களேயும், அடியார்களேயும் உருவாக்கிச் செயல்பட்டும், நாற்பத்தெட்டு வகை வழிபாட்டு நிலேயங்களேயும், சுடுகாடு, புதைகாடு, ... முதலிய பதினெட்டு வகைக் காடுகளேயும்

புத்துயிர்ப்புச் செய்தும் ... செயல்படுகிறார் குருதேவர் தலைவர், ஞானாச்சாரியார்.

(5) இந்த நிறுவனங்களின் கட்டுக்கோப்புக்காகவும், நிர்வாக ஒருங்கமைப்புக் காகவும் தேவையான பல அரிய அருளூறு மந்திரங்கள்#, இலக்கியங்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள் ளார் இந்துமதத் தந்தை. (# இது அனைத்து வகையான பூசை மொழிகளையும், சடங்கியல் மொழிகளையும், ஒலிகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாகவே இங்கு பயன்படுத்தப் படுகிறது. மந்திறம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், தந்திரம், தந்திறம், தந்தரம், தாந்தரம், தாந்தரீகம், எந்திறம், எந்திரம், ஏந்தரம், ஏந்தரம், ஏந்தரீகம், ... என்று நாற்பத்தெட்டு வகையான அருளூறு வாசகங்கள் அல்லது இலக்கியங்கள் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன.)

(6) இந்து மறுமலர்ச்சிக்காக இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களின் நேரடி உரிமை வாரிசாகிய குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் வெளியிட முன்வந்துள்ள வரலாறுகள், புராணங்கள், இதிகாசங்கள், பூசாவிதிகள், குருமார் ஒழுகலாறு, கருவறைப் படிகள், அத்திர, சாத்திர, சூத்திர, தோத்திர, நேத்திரங்கள், சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைகள், நேம, நியம, நிடத, நிட்டைகள், ... முதலியவை அச்சேறிடக் கோயில் உண்டியல்களில் காணிக்கையாகக் கொட்டுவது போல் நிதியுதவி தாருங்கள். இந்துமதத்திற்கு வடிவமைப்பும், புதுவாழ்வும் ஏற்பட்டிட இந்துக்கள் தாராளமாக ஏராளமான நிதியை வழங்கியேயாக வேண்டும். ஏனெனில், பதினெண் சித்தர்களும் நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும் படைத்துள்ள இலக்கியங்கள்தான் இந்துமத உயிர் மூச்சாக உடலின் அங்கங்களாக, இயக்கச் சத்தியாக இருக்கின்ற ஆயிரமாயிரம் கோயில்களைக் குடமுழுக்குச் செய்து பார்ப்பது போல் சித்தர்கள் இலக்கியங்கள் அச்சேறி மெய்யான இந்துமதம் வளவளர்ச்சியும், மலர்ச்சி செழிச்சியும் பெற்றிடச் செய்வதே உடனடித் தேவை.

‘இந்துமதம் ஒரு சமூக விஞ்ஞானம்’ என்ற பேருண்மையும், ‘இந்துமதமே உலக முதல்மதம், மூலமதம், மதங்களின் தாய், மனிதப் பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் கரு’, ... என்ற

பேருண்மையும் சித்தர்களின் இலக்கியங்களால்தான் விளங்கிடும். எனவே, மானுட நல வளர்ச்சிக்காக சித்தர்களின் இலக்கியங்கள் அச்சேறிடப் பேருதவிகளை நல்குமாறு அனைவரையும் வேண்டி இந்த வணக்க வுரையை முடிக்கின்றோம்.

(7) அருளை அநுபவப் பொருளாக வழங்கி மருந்தினால் தீராத நோய்களை யெல்லாம் தீர்த்து மானுட நலத்துக்காக இயங்கும் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களை அனைவரும் நாடி நலமடையுமாறு வேண்டுகிறோம். "சித்தர்களின் மெய்யான இந்துமதம் விஞ்ஞானச் சூழலிலும், பகுத்தறிவுப் போக்கிலும், தொண்டு நோக்கிலும், ... செயல்படுகிற ஒன்றேயாகும்" என்ற தத்துவமே இன்றைய இந்து மதத் தந்தையின் சாதனைகளும், போதனைகளும் ஆகும் என்பதைக் கூறி இந்த உரையை முடிக்கின்றோம்.

ஓம் திருச்சிற்றம்பலம்

அன்பு
தலைமைப் பொறுப்பாளர்
அருள்மிகு அங்காளபரமேசுவரி
சன்னிதானம்

**//உண்மை நகல்//**

**இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.**

# எத்தனை ஐயப்பன்கள்!

### சபரியின் மலையில் சமாது கொண்ட அருள்மிகு ஐயப்ப பண்டாரம்.

திரேதகா யுகத்தின் நாயகரான சித்தர் காகபுசுண்டர் பரம்பரையில் தோன்றிய யக்ஞவல்லியின் குருவாக விளங்கிய ஏழாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கபாடபுரத்துக் கருவூரார் அவர்கள் அயோத்தி தசரத இராமன் வேண்டுகோளால் **'வேடுவ குலத்துத் தவமூதாட்டி சபரி தீப்புகுந்து எரிந்த யக்ஞ குண்டத்தின் மீது கட்டிய சமாதின் சத்தி வழங்கு அருளூற்றுத்தான் சபரிமலை**'. இச்சபரி மலையின் அருளூற்றுக் காப்பாற்றப்பட அக்காலத்து அருளாட்சியில் முதன்மை பெற்று விளங்கிய பதினெட்டாம்படிக் கருப்புகள் அருவுருவ சமாதியாயினர். அத்துடன், காலங்கள் தோறும் சித்தி முத்தி பெறும் ஐயனார்களில் விருப்பமுள்ளவர்கள் இந்தச் சபரிமலையில் பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட்கோட்டத்தில்

சமாது ஆகி இந்து மத மலர்ச்சிக்கும் வளவளர்ச்சிக்கும் உறுதுணையாகிடும் திட்டமும் அறிவிக்கப்பட்டது. எனவே, சபரிமலையில் காலங்கள் தோறும் பல ஐயனார்கள் சமாது ஆகி வருகிறார்கள்.

சபரிமலையில் சமாது ஆகியுள்ள **பல ஐயனார்களில் ஒருவரே சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் கேரள நாட்டுப் பந்தள மன்னனின் திருமகன் ஐயப்பன்.**

இவன் கருவில் திருவுடையானாகத் தோன்றிச் சித்துக்கள் விளையாடித் தனது பதினாறுவது வயதில் ஞான முதிர்ச்சி பெற்றான். இவனுக்கு அருவுருவ சித்தியும் முத்தியும் கிடைத்ததால், இவன் சூரிய குலத்துக் குரிய சித்தர் காகபுசுண்டரின் வாரிசுகளையும், சந்திர குலத்துக்குரிய சித்தர் கருவூராரின் வாரிசுகளையும் சந்தித்து முறைப் படி குருவருளும் திருவருளும் சித்தி செய்து கொண்டான். பிறகு கலியுகத்தில் இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், பத்தி இயக்கப் புத்தமைப்புக் காகவும், அருளுலகக் குருநிலை மாணாக்க நிலை விளக்கத்துக் காகவும்.... மூன்று யுகங்களாகச் சிறந்த அருளூற்றாக இருந்து வரும் சபரியின் சமாது அருகிலும், பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட்கோட்டத்துள்ளும் அருவுருவ சமாது நிலையை நிறுவினான்.

இவன் கலியுகத்தில் ஆண்டுக் கொரு முறை அருள் வழங்கு பண்டாரமாக விளங்கிட அருளுலகத்தார் ஒப்புதல் வழங்கினார்கள். அதுவும், **இந்துமத ஆண்டு பிறக்கின்ற தை மாதத்தின்** முதல் வாரத்தோடு இப்பண்டார பணிவு நிறைவுற்று; மீண்டும் ஐயப்பன் அருவுருவ சமாதியில் நிறைந்திடல் வேண்டும். ஐயப்பன் பண்டார நிலை பெறக் கார்த்திகை மாதத் துவக்கம் முதல் பத்தர்கள் பூசை செய்து, வருந்தி, அரற்றி, பாடுகிடந்து, தொழுது, புலம்பி, ஆடிப்பாடி, கூப்பாடு போட்டுக் கும்பிட்டுத் தவநிலைகளை வெற்றியுறச் செய்ய வேண்டும். சிவநிலைக்குரிய கார்த்திகை மாதமும், திருமால் நிலைக்குரிய மார்கழி மாதமும் பத்தர்களின் தவநிலை மாதங்கள், பிறம்மண் [பிற + மண் -=> இம்மண்ணுலகின் பிறப்புக்களுக்குப் பொறுப்பாக உள்ள படைப்புக் கலைஞனை பிறமண்] நிலைக்குரிய தை மாதத்தின் முதல் வாரமே ஐயப்பன்

அருள்வழங்கு பண்டாரமாகச் செயல்படும் நன்ஞட்கள்.

"ஐயப்பன் அருள் வழங்கிடல் அறுபத்து நான்கு நாள்" என்ற குருபாரம்பரிய வாசகம் மேற்படி விளக்கங்களின் சாரம்.

**குறிப்பு:-** "பிறமண் நிலே பெற்ற ஐயப்பன், முத்தைய்யா, இலாட சன்ஞசி, கருப்பண்ணசாமி, வீரன், சூரன், கங்காணி, காராளன், பகவன் ... ஐயம்மாள், முத்தாளம்மாள், கருப்பாயி, வீரம்மாள், சூரம்மாள், கங்காணி யம்மாள், காராளச்சி, பகவதி, மாரி, காளி [மாரியப்பன், காளியப்பன்] ... முதலிய வழிபடு நிலேயினர்கள் தை முதல் வைகாசி முடிய அருள் வழங்கு பண்டார நிலேயின ராகிருர்கள்" - **குருபாரம்பரியம்.**

**சிறப்புக் குறிப்பு:-**

விரிவஞ்சியும், அவசர அவசியம் கருதியும், இன்றைய மக்களின் மனநிலே கருதியும், வரலாற்றுப் பேருண்மைகளே அப்படியே சுருக்கமாக வழங்க எண்ணியுமே ஐயப்பன், வரலாறு, வாழ்வியல், தத்துவம், செயலியல்... முதலியவை பற்றி சிறப்புக் குறிப்புக்கள் எழுதுகிருேம்.

"சுமார் 500 ஆண்டு எல்லேக்குள் வாழ்ந்த கேரள நாட்டுப் பந்தள மன்னனுக்கும் அவனுடைய மூத்த மனேவிக்கும் பிறந்தவனே ஐயப்பன். அறுவை மருத்துவ முறையில் பந்தள மன்னனின் முதல் மனேவி பார்வதியின் வயிறு கிழிக்கப்பட்டு (அறுவை சிகிச்சையில்) எடுக்கப் பட்ட குழந்தையே ஐயப்பன். இம் மருத்துவ மகப்பேறில் பார்வதி இறந்து போனுள். மன்னனின் இரண்டாவது மனேவி கங்கை (கங்கா) கருவுற்றுக் கோவிந்தன் என்ற ஆண்மகவைப் பெற்ருள். இவன் தனது மகனுக்குப் பட்டம் கிடைக்க வேண்டும் என்பதற்காகச் செய்த சூழ்ச்சிகளேக் கருவில் திருவுடையாஞகப் பிறந்த ஐயப்பன் வென்றிடுகின்ருன்.

நாட்டில் புதிதாகப் பரவத் தொடங்கிய இசுலாமிய ஆட்சியின் பெயரால் தோன்றிய முகம்மது யூசுப் என்ற கொள்ளேக்காரனேத் தனது அருளாற்றலால் திருத்திச் சமாது அடையச் செய்கிருன் ஐயப்பன். இறுதியாகச் சிற்றன்னே புலிப்பால் கேட்டதற்கு ஒரு புலிக் கூட்டத்தையே அழைத்து வந்து; தாஞேர் **'திருத்தோன்றல்'**

(தேவகுமாரன், அவதாரம், அருளாளன்) என்பதை மெய்ப்பித் தான் ஐயப்பன். அதன் பிறகே தனது சிற்றன்னையை மன்னித்து, அவள் மகன் கோவிந்தனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டுத் தனது முத்திக்காகக் கடுந்தவம் செய்யப் **16 வயதிலே சபரி மலைக்குச் சென்றான்.**

18வது வயதிலே அருட்பெருஞ் சோதியாக அனைவரும் காணச் சபரிமலைப் பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட்கோட்டத்தில் நிறைந்தான். இவன் ஆண்டு தோறும் அருட்பெருஞ்சோதியாகத் தோன்றி அருள் வழங்குகிறான். மாதம்தோறும் பூச மீனின் நிறைவின் போது அருட்கோட்டக் கருவறையில் அருட்பெருஞ் சோதியாகக் காட்சி தருகிறான்.

இவனது தந்தை பந்தள மன்னன் அரசசேகரன் வேண்டுகோளின்படி காக்காவழியன் பண்ணையாடி அமராவதி ஆற்றங்கரைச் சோழியாயி (சோழமாதேவி) கோயில் பூசாரி சித்தர் காகபுசுண்டர் (காக்கையர்) பரமசிவம் பிள்ளை மகனார் வீரபத்திரப் பிள்ளை சந்தன மரத்தால் ஐயப்பன் சிலை செய்து அருளேற்றிக் கொடுத்தார்.

அதனைத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் வழிவந்தவரும், அரியலூர்க் கோவிலூர் ஐயப்பன் கோயில் பூசாரியுமான சித்தர் கைகொட்டிநாதர் என்பவர் ஐந்தீ வேட்டல், முத்தீ ஓம்பல்... முறைகளில் சபரி மலைக் கருவறையில் 'வெட்டவெளிக் கருவறை கொண்டருளு தேவன் ஐயப்பன்' என்று நிறுவிப் பந்தள மன்னன் மகன் ஐயப்பனுக்கு அருவுருவ சமாது ஆலயம் நிறுவினார்.

இந்தச் சரவணபிள்ளைதான் தமிழ் விடுதூது பாடிய கவிஞர் என்பதாக இலக்கியப் பாரம்பரியச் செய்தி கூறுகிறது. சோழ அரச குலத்து மன்னன் நாட்டரசன் பதவி இழந்ததால், ஏட்டரசனாகித் தமிழ் விடுதூது பாடிப் புகழுடம்பு பெற்றான். இவன் ஆலயங்கள் நிறுவும் வல்லியாக விளங்கியது போலவே; தமிழ்விடு தூது

பாடியதன் மூலம் தமிழ்த் தாய்க்கும் ஓர் ஆலயம் நிறுவினான். இவன் சபரி மலையில் நிறுவிய ஐயப்பன் ஆலயம் 'சந்தனம் அரைக்க அரைக்க மணப்பது போல் காலம் செல்லச் செல்ல, பத்தி செய்யச் செய்ய அருள் மணம் பரப்பும் இந்த ஆலயம் ஆண்டுக்கு ஒரு முறை தொழுகை செய்யப்படும் வெட்டவெளிக் கருவறை ஆலயம்' என்பதைக் குருவாக்கிலும், குருவாக்கியத்திலும், குரு வாசகத்திலும், குருபாரம்பரியத்திலும் காண்க.

**- இலக்கியப் பாரம்பரியக் குறிப்பு.**



# ஐயப்பனும் ஐயனார்களும்

ஐயப்பன் எனும் தேவகுமாரநிலை, பிறம்மண் நிலை, தேவநிலை, வழிபடு நிலை, சமாதுநிலைச் சான்றோர் நிலை ... முதலியவற்றிற்குரிய சித்திமுத்திச் செல்வர்கள் அனைவருமே திருமணமாகாதவர்கள், மனைவியை இழந்தவர்கள், 64 வயதைக் கடந்தவர்கள், உலகியல் காரணங்களால் பெண்ணின்பத்தை வெறுத்தும், மறுத்து, ஒதுக்கியும் வாழ்ந்தவர்கள் ... இப்படிப் பட்டவர்களின் சமாதுகள், அதிக மனித நடமாட்டமில்லாத மலையுச்சிகளில்தான் இருக்கும். இராமாயண காலத்தில் (திரேதகா யுகத்தில்) இப்படிச் சித்தர் நெறிக்கு அப்பாற்பட்ட, இந்துமதம் விரும்பாத பெண்மறுப்பாளர் அருட்கோட்டம், ஆலயம், கோயில்,... முதலிய 48 வகை வழிபாட்டு நிலையங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் வந்தது. சீதையைத் தேடிச் சென்ற இராமன் மேற்குத் தொடர்ச்சி மலையில் அலைந்த போது சபரி யக்ஞத் தீயில் கருகிச் சாம்பலாகக் காரணமாக இருந்தான்; அதனால் இராவண யுத்தம் முடிந்து

திரும்பும்போது சபரியின் ஆலயம் வந்து சென்ருன்; சபரிக்கு வெட்டவெளிக் கருவறை அமைத்தான்; கபாடபுரத்துக் கருவூருரிடம் வேண்டுகோள் விடுத்து இதனைச் சிறந்த அருளூற்ருகவும், பதினெட்டாம்படிக் கருப்புகளின் அருட்கோட்டப் பாதுகாப்புப் பெற்ற ஆலயமாகவும் மாற்றினன். இதனல் முருகன் ஆலயமுள்ள மலைகளில் எல்லாம் ஐயப்ப நிலை பெற்றவர்களின் உருவ, அருவுருவ அருவச் சமாதுகளுக்கு ஒப்புதல் வழங்க நேரிட்டது. ஆனல், அதுவே ஐயப்பன், ஐயனர் என்ற இருவேறுபட்ட அருள்நிலைகளுக்கும் இடையிலுள்ள பல பேருண்மைகள் கலங்கவும் குழம்பவும் நேரிட்டு விட்டது.

இக்குழப்பங்கள் அயோத்தித் தசரத இராமன் தனது மனைவியை ஊர்ப் பழிக்கு அஞ்சிக் காட்டுக்கு அனுப்பிய பின் மீண்டும் சபரி மலைக்கு வந்து சபரியின் தம்பி ஐயப்பனுக்கு வெட்ட வெளிக் கருவறை அமைத்து வழிபட்டுச் சென்றதால்; ஐயப்பன், ஐயனர் என்று இரண்டு வேறுபட்ட, மாறுபட்ட சத்தி நிலைகளைப் பற்றிய பேருண்மைகள் கலங்கிக் குழம்பி ஒன்ருகி விட்டன. அதாவது,

*'ஆலயமும் கோயிலும் ஒன்ரு*
*யிடுச்சு; -*
*அவலக் கேவலங்கள் அருளுலகுக்*
*காயிடுச்சு'*

என்ற பாடல் வரிகள் போல்

*'ஐயனரும் ஐயப்பனும் ஒன்ரு*
*யிடுச்சு;*
*அன்ருடப் பூசையில் கலக்க*
*குழப்பங்கள் மிகுந்திடுச்சு*
*அருட்சத்தி சித்தி நிலைகளில்*
*தேக்க ஏக்கங்கள் வந்தாச்சு'*

என்ற பாடல் வரிகள் சித்தர்களாலேயே எழுதப் பட நேரிட்டு விட்டது. அந்தந்த ஊரைக் காத்திடக் குடும்பியாக வாழ்ந்து (இல்லறத்தார்) சித்தி முத்தி பெற்றுச் சமாது எய்திட்ட ஐயனர்களுக்கு அன்ருடம் நடக்கும் உருமவேளைப் பூசையும், முக்கால வழிபாடும், ஆண்டுத் திருவிழாவும் நலிந்து மெலிந்து செல்வாக்கிழந்து செயல்நலம் குன்ற நேரிட்டதும், ஐயப்பனையும் ஐயனரையும் ஒன்ருக்கிட்ட குழப்பத்தால்தான். இக்குழப்பத்தைப் பொறுமையாகவும் பொறுப்பாகவும் நல்ல விளக்கங்களையும் அனுபவச் சான்றுகளையும் வழங்கியே சரி செய்ய வேண்டும். "... ஊர்தோறும் இருக்கின்ற

ஐயனூர்கள் இல்லறத்தில் சிறந்தவர்கள்; மனைவி மக்களோடு வளமாக வாழ்ந்தவர்கள்;

*'பெண்ணின்பமே பேரின்பம்',*

*'பெண்ணே தாய்த் தெய்வம்',*

*'பெண்ணே விண்ணையும் மண்ணையும் இணைப்பவள்' ...*

என்ற சித்தர் நெறித் தத்துவத்தைப் புரிந்து செயலாக்கியவர்கள். எனவே, அந்தந்த ஊர்க்காரரர்கள் கார்த்திகை, மார்கழி மாதங்களில் விரதம், தவம், பாடுகிடத்தல், ஆடுதல், பாடுதல் ... முதலிய பூசைகளைச் செய்து தை மாதத்தில் அருட்பெருஞ் சோதியை வணங்கி ஐயனூரின் அருளைப் பெற்று உய்யலாம். எல்லோரும் சபரி மலை ஐயப்பனை வணங்கச் செல்லத் தேவையில்லை. முருகன் கோயில் இருக்கும் மலைகளுக்கு கார்த்திகை, மார்கழியில் பூசை செய்து தைமாதத்தில் மலை மீதேறி வணங்கி ஐயப்பன் அருளையும், ஐயனூர் அருளையும், முருகன் அருளையும் பெறலாம்...." என்று கபாடபுரத்துக் கருவூரூரின் குருபாரம்பரிய வாசகம் கூறுகின்றது.

எட்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் தாமிரபரணி ஆற்றங்கரைக் கருவூரூர் அவர்கள்; பாரத காலத்தில் [துவாபர யுகத்தில்] இந்த ஐயப்பன் ஐயனூர் வழிபாடுகள் பற்றிச் சுருக்க விளக்கக் குருபாரம்பரியக் கருத்து வாசகம் வழங்கியிருக்கிறூர்.

**"... 'மண்ணுலக இன்பங்களையும் செயல் வெற்றிகளையும், நல்வளங்களையும் ஊர்தோறுமுள்ள இல்லற வழிச் சித்தி முத்தி பெற்ற ஐயனூர் வழிபாட்டால்தான் பெற முடியும், சாதிக்க முடியும், அடைய முடியும்.'**

சாத்தான் => 'சார்ந்தவன்' என்ற சொல்லின் திரிபே. அதாவது [சேர்ந்தவன் => சார்ந்தவன்] மும்மூர்த்திகளான சிவன், திருமால், பிறமண் என்ற முழுமுதற் பரம்பொருள்களைச் சேர்ந்தவனே இந்தச் சாத்தான் என்பதே பொருள். பிறமணுக்குச் சமமாகவே நாரதர், ஐயப்பன் (ஐயனூர்) என்பவர் உள்ளனர். ஐயப்பன் என்பவன் மும்மூர்த்திகளுக்குச் சமமானவன் என்ற பொருளிலேயே, அவர்களைச் சேர்ந்தவன் => சேந்தவன் => சேந்தன் => அமுதன் என்ற பெயர்களும்; அவர்களைச் சார்ந்தவன் =>

சாந்தன் => சாத்தன் => சான்ருர் என்ற பெயர்களும்; இவனுக்கும் தலைமை அதிகாரம் உண்டு என்பதைக் குறிக்கும் வண்ணம் ஐயர், ஐயன், ஐயப்பன், ஐயருர் ... என்ற பெயர்களும் பிறந்தன. மிகுந்த ஆற்றலையும், போர்ப் பண்பையும், காவல் திறத்தையும், முருகனைப் போன்ற சீற்றத்தையும் உடைய காவல் தெய்வமாக 'ஐயருர்' ஏற்கப்பட்டார். அல்லி, தாமரை என்ற இரு மனைவிகளுடன் அருளாட்சிச் சேருதிபதியாக உள்ள இவர் ஊர் எல்லைகளில் கருவறை பெற்றிட்டார்.

எனவேதான், சங்க காலத்தில்; இவர் 'புறம்பணையான்' எனப் பட்டார். சிலப்பதிகாரம், புகார் நகரில் 'புறம்பணையான் வாழ் கோட்டம்' இருந்ததைக் குறிக்கிறது. திருமணமாகாத இளைஞர்கள் அல்லது துறவிகள் சிறந்த ஐயருர் பத்தராக இருந்து முத்தி பெற்றுச் சமாது வைக்கப்பட்டுக் கோயில்கள் கட்டப்பட்ட காலத்து அவை 'ஐயன் கோயில்', 'ஐயம்மாள் கோயில்' எனப்பட்டன. இவையே, காலப் போக்கில் 'ஐயப்பன் கோயில்கள்' என்ருயின. ஆருல், மலைமுகடுகளில், காடுகளில், மனித நடமாட்டமற்ற இடங்களில் இராமாயணக் கால சபரியின் தம்பியான ஐயப்பனை [இல்லற மற்றவன்] வழிபட்டு முத்தியா-கிறவர்களின் சமாதுக் கோயில்கள் மட்டுமே ஐயப்பன் கோயில் என்பதுதான் மரபு.

பெண்கள் போகக் கூடாது, பெண்ணின்பம் துய்க்கக் கூடாது, துய்க்காத விரதம் தேவை ... என்ற கட்டுப்பாடுகள் ஐயப்பன் பூசைக்கு ஏற்பட்டதற்குக் காரணமே சபரியின் தம்பி ஐயப்பன் இல்லறமறுத்துத் தனித்துத் தவம் செய்து சமாது ஆனதுதான். சித்தர்களும், அவர்களின் இலக்கியங்களும், அவர்களுடைய சித்தர் நெறி எனும் மெய்யான இந்துமதமும், அவர்களுடைய பிற தத்துவக் கருத்துக்களும், சித்தாந்தச் செயல்துறைகளும் இருட்டடிக்கப் பட்டதால், திரித்துக் கூறப்பட்டதால் ... ஐயப்பன், ஐயருர் என்ற மாபெரும் தனித் தன்மைகள் குழப்பப்பட்டு விட்டன. இனி மேலாவது, இக்குழப்பம் அகற்றப் பட்டாக வேண்டும். வடமொழியில்

*வேட்டி => வேஷ்டி;*
*குட்டம் => குஷ்ட்டம்;*
*கடினம் => கட்டம் => கஷ்ட்டம்*

என்று திரிக்கப் பட்டது போல்

சாத்தா => சாஸ்த்தா ஆக்கப் பட்டது.

(1) இல்லற வாழ்வின் சட்டதிட்டக் கட்டுப்பாட்டுக்குள் வாழும் சிருஅர் முதல் பெரியவர் வரை வழிபட்டு பத்தி, சத்தி, சித்தி, முத்திகளில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாகவும், வாயிலாகவும், வழியாகவும்... இருக்கக் கூடியது ஊர் தோறும் இருக்கக் கூடிய ஐயனுரே. இது இல்லற வழியில் நிறைவு கண்டோரின் சமாதியேயாகும்.

(2) 'விண்ணுலக நிலைகளையும் இன்பங்களையும் இல்லறம் கடந்த ஞானங்களையும், உலகியல் துறந்த சித்திகளையும், மறுபிறப்புப் பயன்களையும், மறுமையுலகப் பயன்களையும், மலைமுகடுகளில் சமாது பெற்றுள்ள இல்லறமற்றுச் சித்தி முத்தி பெற்ற ஐயப்பன் வழிபாட்டால்தான் பெற முடியும், சாதிக்க முடியும், அடைய முடியும்'. எனவே, இல்லற இன்பம் துய்க்காத, அல்லது துய்த்து வெறுத்து மறுத்திட்ட சிருஅர் முதல் பெரியவர் வரை வழிபட்டுப் பத்தி சத்தி சித்தி முத்திகளில் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாகவும், வாயிலாகவும், வழியாகவும் ... இருக்கக் கூடியது ... மலைகள் தோறும் இருக்கக் கூடிய ஐயப்பனே! இது, பெண்ணை மறந்தும் துறந்தும் மறுத்தும் வெறுத்தும் உலகியல் கடந்த வழியில் நிறைவு கண்டோரின் சமாதியேயாகும்.

(3) அவரவர் அவரவர் ஊரருகில் உள்ள ஐயனுர்களைப் பத்தி செய்து சத்தி சித்தி முத்தி பெற்றுலே போதும். இத் தத்துவத்தால்தான்; பதினெண் சித்தர்கள், இல்லறத்தார் எளிதில் சித்தி முத்திகளால் ஐயனுர் நிலை அடைவதற்குரிய வழிவகைகளும் சத்தி நிலைகளும், கருவழி, குருவழி, தருவழி, திருவழி ... எளிதாகக் கிடைத்திடுமாறு இந்துமதத்தைப் படைத்திட்டார்கள். ஆனுல், இந்து மத மூலவர்களா கவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களே மறதியாலும், சோம்பலாலும் ஏமாளிகளாகி இந்துமதத்தையே தெரியாத புரியாத நிலைகளை எய்தி விட்டார்கள்.... இதற்குச் சித்தர்களின் கதைகள், காதைகள், கவிதைகள் (காப்பியங்கள்), கீதைகள் எனும் நான்கு(வகை)நெறி இலக்கியங்களும்; இருபத்தேழு வண்ண இலக்கியங்களும் மலர்ச்சி பெற்றேயாக வேண்டும். சித்தர்களின் இலக்கிய மறுமலர்ச்சியே இந்துமதச்

செழிச்சி மீட்சியாகும்...” என்று கூறுகிறுர். - தாமிரபரணி ஆற்றங்கரைக் கருவூருரின் குருபாரம்பரிய வாசகம்.

கபாடபுரத்துக் கருவூருரின் குருபாரம்பரிய வாசகமொன்று: “‘அரி’ எனும் திருமாலும், ‘அறன்’ எனும் சிவனும் இரண்டாக இணைந்தாலும் ஐயனுருக்குச் சமம். இதனுல்தான், ஐயனுரை அரி+அறன் => அரியறன் => அரிகறன் என்று அழைக்கிறுர்கள்” என்றிப்படிக் கூறுகிறது.

மற்ருெரு வாசகம்: “அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த ஐயனுர் ‘வளை’யெனும் வளைந்த குறுந்தடி எறிவதிலும்; ‘செண்டு’ எனும் போராயுதம் ஏந்துவதிலும் வல்லவர். இவர் குதிரையும், களிறும் வாகனமாக உடையவர். அல்லி, தாமரை என்ற இரு மனைவிகளை உடையவர். இறைச்சி யுணவில் பெருவிருப்பமுடையவர். இவர் ஓர் யக்ஞவல்லி” என்று இப்படிக் கூறுகிறது.

தமிழில் ‘அ’ என்ற அகர எழுத்தைப் பயன்படுத்தி ‘அய்யனுர்’ என்று எழுதும் சொல் ‘ஐ’காரத்தைப் பயன்படுத்தி எழுதப் படும் ‘ஐயனுர்’ என்ற சொல்லுக் குரிய பொருளை குறிக்காது. எனவே, ‘ஐயப்பன்’ என்ற கடவுளை, வழிபடுநிலையினரை, தேவநிலை பெற்றவரை, தெய்வநிலை பெற்றவரை, இருடிநிலை பெற்றவரை ... (48 வகை நிலை பெற்றவர்கள் இந்த ஐயனுர் என்ற சொல்லுக்கு உட்பட்டவர்களாக மெய்யான இந்துமதத்தில் இருக்கிறுர்கள் என்பது குறிப்பிடத் தக்கது) அய்யப்பன் என்று எழுதுவது தவறு! தவறு!! தவறு!!! மாபெரும் தவறு.

தமிழில் உள்ள உயிரெழுத்துக் கள் பன்னிரண்டுக்கும், ஓர் ஆய்த எழுத்துக்கும்; பதினெட்டு மெய்யெழுத்துக்கும், எழுதாக் கிளவியான ஒரு நச்சு எழுத்துக்கும் தனித்தனிக் கடவுள்கள் அல்லது சத்திகள் என்று முப்பத்திரண்டு வகை சத்திகள் உருவாக்கப் பட்டே பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதம் படைக்கப் பட்டுள்ளன. மனிதனுக்கு முப்பத்திரண்டு பற்கள், முப்பத்திரண்டு அங்கங்கள் இருப்பது போலவே, இந்து மதத்துக்கு முப்பத்திரண்டு சத்திகள் படைக்கப்பட்டு இருக்கிறுர்கள். இதுதான் மெய்யான இந்துமதத்தின் அடிப்படை இரகசியம். இதைத் தெரிந்திருப்பவர்கள் பதினெண் சித்தர்களின் பரம்பரையினர். இந்த முப்பத்திரண்டையும் உயிர்ப்புச்

செய்து இயக்கத் தெரிந்தவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள். எனவேதான், அருளாட்சி பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் மட்டுமே மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் முழுமையாகப் பெற்றிடுகின்றது. அதாவது, அருளுலக அறியாமைகள், புரியாமைகள், மடமைகள், தவறான இயக்கங்கள், பயனில்லாத செயல்கள், கவைக்குதவாத கற்பனைகள், சுயநலக் காரர்களின் சூழ்ச்சிகள், சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், சர்வாதிகாரங்கள், முதலாளித்துவப் பிடிப்புக்கள்... முதலிய அனைத்தும் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றும் போது உலக மதத்துறையிலிருந்து முழுமையாக அகற்றப் பட்டிடும். அம்மாபெரும் பணிக்குத் தமிழ்மொழியின் முப்பத்திரண்டு எழுத்துக்களுக்குரிய முப்பத்திரண்டு சத்திகளும் [ஒவ்வொரு சத்தியும் (48) நாற்பத்தெட்டு வகையுடையது] புத்துயிர்ப்புச் செய்யப்பட்டுப் பயன்படுத்தப் படுவதே மரபு, முறை, நெறி, செயல் சித்தாந்தம்.

'ஐயப்பன்' (ஐயனார்) என்பது உலகமத இருளகற்றும் மறுமலர்ச்சிச் சத்திகளான முப்பத்திரண்டில் ஒன்று. எனவேதான், இந்த 'ஐயப்பன்' என்ற சொல்லுக்குரிய பொருளும், வரலாறும், தத்துவமும், சித்தாந்தமும், வாழ்வியலும் தக்க தருணத்தில் வெளியிடப்படும் பணி துவக்கப் பட்டிருக்கிறது.

இந்துமதத்தின் இறவாத் தன்மைக்குக் காரணமாக இருக்கின்ற முப்பத்திரண்டு வகை அருளாளர்களில் ஒருவரே ஐயனார் (ஐயப்பன்). இம் மண்ணுலகுகில் கடந்த நான்கு யுகங்களுக்கும் உரிய 43,73,087 ஆண்டுகளுக்கு முரிய (1986இல்) நெடிய பெரிய கால இடைவெளியில் ஆயிர மாயிரம் ஐயனார்கள் தோன்றி யுள்ளார்கள்.

இவர்களில் 1.பாலகர்கள், 2.சிறுஅர்கள், 3. இளைஞர்கள், 4.ஆட்கள் (நடுத்தர வயதினர்), 5. பெரியவர்கள், 6. முதியவர்கள், 7. கிழவர்கள் என்று ஆணுக்குரிய ஏழு பருவத்தினர்களும்; பெண்களுக்குரிய 1. பேதை, 2. பெதும்பை, 3. மஞ்ஞை, 4. மடந்தை, 5. அறிவை, 6. தெரிவை, 7. பேரிளம்பெண் என்று பெண்ணுக்குரிய ஏழு பருவத்தினர் களும் உள்ளனர். எனவே, ஐயப்பன், ஐயனார் என்று கூறப்படும் கடவுள்களில் ஆண், பெண் என்று இருவகையினரும் உண்டு; ஏழு பருவத்தினரும் உண்டு; இல்லறம் ஏற்றவரும்

உண்டு; இல்லறம் ஏற்காதவரும் உண்டு.

இந்தப் பேருண்மைகள் புரிந்தால்; நாத்திகர், பகுத்தறிவு வாதி, இன்றைய திராவிடர் கழகத்தவர், “சிவன், திருமால் எனும் இரண்டு ஆண்களுக்குப் பிறந்த குழந்தையே ஐயப்பன்” என்ற பிருமணரின் [பிற மண்ணினர் => பிருமணர் = அன்னியர்] வேதமதமான பொய்யான ஹிந்துமதத்தின் காட்டுமிராண்டித் தனமான கற்பனைக் கதையால் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்துக்கு ஏற்பட்ட இழிவுகள், பழிகள், கேவலங்கள், அவலங்கள் ... முதலிய அனைத்தும் நீக்கப்படும், அகற்றப்படும், போக்கப்படும், தடுக்கப்படும்.

எனவே, ஆரிய மாயைகள், பிருமணப் பொய்கள், வட ஆரிய வேதமதக் கற்பனைகள், பிருமணரின் ஹிந்து மத ஆபாசங்கள், காட்டுமிராண்டித்தனங்கள், மடமைகள், மூடத்தனங்கள் ... முதலிய அனைத்தையும் அறிவியல் பூர்வமாக ஆராய்ச்சி அடிப்படையில் விளக்கி யுரைத்து, மெய்யான இந்துமதத்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிச் செழிச்சியும் அடையுமாறு செய்வதே இன்றைய உண்மையான மத வாதிகளின் கடமை; அருளாளர்களின் கடமை.

இதை விடுத்துச் சித்தர் நெறியினர் தமிழினத் தலைவர், இந்துமதச் சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுப் பகலவன், சிந்தனை யருவி, ... சொல்லடி நாயனுர் பெரியார் ஈ.வெ.ரா. போல் அவசரப்பட்டும் ஆத்திரப்பட்டும் செயல்பட்டுப் பெரும்பாலான மத வாதிகளைப் புண்படுத்தி மாபெரும் தோல்வியைத் தழுவிடக் கூடாது.

அதாவது, *‘இந்துமதத்தின் காவலர்களும் மூலவர்களும் சொந்தக்காரர்களும் தமிழர்கள்தான்’* என்ற கருத்தையும்; **‘பிருமணர்களும் சமசுக்கிருத மொழியும்தான் தமிழரை, தமிழ்மொழியை, தமிழரின் இந்துமதத்தைச் சிதைத்துச் சீரழித்து நலிந்து மெலிந்து செயலிழக்கச் செய்தனர்’** என்ற கருத்தையும்; ... மிகமிகத் தெளிவாக விளக்கித் தமிழினத்தின் மானம், மரியாதை, உரிமை, பெருமை, ... முதலியவைகளைக் காக்க இரவு பகலாக அஞ்சாமல் தொடர்ந்து செயல்பட்ட மாவீரரே பெரியார் ஈ.வெ.ரா. ஆவார்.

ஆனால், அவர் பச்சையாகவும், கொச்சையாகவும், கடுமையாகவும், தீவிரமாகவும் ... தமது கருத்தை வெளியிட்டார். அதனால், அவரை நாத்திகர், கடவுள் மறுப்பாளர், மத வெறுப்பாளர், ... என்று தவறான கருத்தோட்டத்தில் பெரும்பாலான தமிழர்களே புரிந்து, விரும்பி ஏற்றிடாமல் போய் விட்டனர். அதைப் பயன்படுத்திக் கொண்டு; பிருமணர்கள் பெரியாரின் போதனைகளையும் சாதனைகளையும் இருட்டடிப்புச் செய்திட்டனர். பெரியாரின் வாரிசாக உள்ளவர்களும் பிருமணரைக் கண்மூடித்தனமாக எதிர்க்கும் காட்டுமிராண்டிச் செயலால் பெரியாரின் தோல்வியை நிலைநிறுத்தி வருகிறார்கள். இவற்றைப் புரிந்தவர்களே நாம்.

எனவே, நாம், நிதானமாகவும், பொறுப்பாகவும், தெளிவாகவும் அனைவரின் சிந்தையும் நெஞ்சமும் பண்படுமளவுக்கு மிகுதியான சான்றுகளையும் ஊன்றுகளையும் வழங்கியும் 'எண்ணப் புரட்சி', 'சிந்தனைப் புரட்சி', 'கருத்துப் புரட்சி' ... முதலியவைகளை விளைவித்திடல் வேண்டும்.

இன்றைக்கு, நாட்டு நடப்பில் வளவளர்ச்சி பெற்றுச் சிறந்து விளங்கும் [கேரள நாட்டு] சபரிமலை ஐயப்பன் வழிபாடு ஒரு மாபெரும் இந்துமத விழிச்சி நிலையே! எழிச்சி நிலையே! செழிச்சி நிலையே! மலர்ச்சி நிலையே! இதனை ஆத்திகர் முதல் நாத்திகர் வரை உணர வேண்டும். புரிந்து, விரும்பி ஏற்க வேண்டும். இல்லாவிட்டால், ஆத்திகர் இந்துமதத்தில் குருடர்களாகவும்; நாத்திகர்கள், இந்து மதத்தில் திருடர்களாகவும் செயல் பட்டிருப்பதாக வருங்கால வரலாறு பழி கூறும்! எச்சரிக்கை!?!?!?

இன்றுள்ள ஐயப்ப பூசையில் **ஒரு சில கற்பனைகள், பயனற்றவைகள், தவறுகள், குறைகள்** இருக்கலாம். ஆனால், இது ஐயப்ப வழிபாட்டுத் தத்துவத்தையோ, சித்தாந்தத்தையோ, வரலாற்றையோ... கறையுடையதாக, குறையுடையதாக, முறையற்றதாக, தவறுடையதாக, பயனற்றதாக, உண்மையற்ற கற்பனையுடையதாக .... எண்ணச் செய்துவிடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! எனவேதான், இந்துமதத் தந்தை என்ற பொறுப்பிலிருந்து ஐயப்ப பூசையின் வரலாறு, தத்துவம், சித்தாந்தம், வேதாந்தம், மறையாந்தம், முறையாந்தம், நெறியாந்தம், நாதாந்தம், போதாந்தம், ஓதாந்தம் ...

முதலியவைகளை வெளியிட வந்துள்ளோம் யாம்.

பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்ஞ்ஞான விதிகளின்படி 'ஐயப்பன் என்ற நிலையை அடைந்தவர்களின் சமாதுகள் உலகெங்கும் இருக்கின்றன. தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களில் எல்லாம் இருக்கின்றன. இவை போன்று, சேரமன்னன் மகன் ஊழ்வினையால் ஐயப்பன் நிலை பெற்றுச் சமாது அடைந்த 'சித்தி வளாகமே', 'அருட்கோட்டமே', ... சபரிமலை ஐயப்பன் கோயில் ... என்று சித்தர்கள் எழுதி வைத்துச் சென்றுள்ள ஏட்டுச் சுவடுகளி லிருந்து சிலவற்றை வழங்கி உள்ளோம். புரிந்து ஆராய்ந்து உணர்ந்து உலகுக்கு அறிவிப்பது உங்கள் கைகளிலே.

**//உண்மை நகல்//**

**மூலம்: குருதேவர் அறிக்கைகளிலிருந்து கிடைத்தவை**

**சித்தி எல்லாம் தரும்**
**ஐயப்பன் காயந்திரி**
**தோத்தர, தோத்திர,**
**தோத்திறங்கள்**
**மந்தர, மந்திர, மந்திறங்கள்**

# முன்னுரை

*அந்தணர் அண்ணல்*
*ஞானாச்சாரியார்*
*இந்துவேத இந்துமத தலைமை*
*ஆச்சாரிய குருபீடம்*
*பதினெண்சித்தர் மடம் பீடம்*
*கருகுலம்*
*இந்து வேதாகம குருகுலம்*

மணுநீதியிலும், மணுவின் சுருதிகளிலும் (மணுநீதியின் சுருதிகளிலும்) உள்ள காயந்திரி தோத்தரங்கள், தோத்திரங்கள், தோத்திறங்கள் முதலியவற்றிலும்; இந்து வேதாகம காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களிலும்; ஐயப்பன் பூசை பற்றிய செய்திகள் நிறைய இருக்கின்றன. ஆனால், இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில்தான் ஐயப்பன் பூசை, வழிபாடு, விரதம், ... முதலியவைகள் மக்களிடையே மிகப் பெரிய செல்வாக்கைப் பெற்றிருக்கின்றது என்று பலர் கருதுகிறார்கள். எனவேதான், இந்த ஐயப்பன் பற்றிய ஒரு சுருக்க

விளக்கக் குறிப்பு நூல் வெளியிடப் படுகிறது.

ஐயப்பன் பற்றிய செய்திகள் மனுநீதியின் (18) பதினெட்டு நூல்களிலிருந்தும் இந்து வேதத்தின் முன்னூற்று தொண்ணூற்ருறு (396) நூல்களிலிருந்தும் இந்துமதத்தின் முப்பத்தாறு (36) நூல்களிலிருந்தும் தொகுக்கப்பட்டு பல ஆயிரம் பக்கங்களை யுடைய நூல்களாக பல தொகுதிகள் வெளியிடப் பட்டே யாக வேண்டும். அப்பொழுதுதான், ஐயப்ப பத்தர்கள் தாங்கள் வழிபடுகின்ற ஐயப்பனைப் பற்றி முழுமையாகத் தெரிந்து, நிறைவாக வழிபாடுகளைச் செய்து தேவையான பயன்களை அடைந்திட முடியும். அதற்கு, ஏராளமான பொருள் வசதியும், ஆராய்ச்சியாளர்களின் துணையும் தேவைப்படுகிறது.

இன்றைய நிலையில் கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மூன்று மாதங்கள் மட்டும் குமரி முதல் இமயம் வரை வாழுகின்ற இந்துக்கள் மேற்கொள்கின்ற ஐயப்பன் பூசை, ஐயப்பன் வழிபாடு, ஐயப்பன் விரதம்; ஐயப்ப பத்தர்களின் திருக்கூட்ட அமைப்புகள், இந்த அமைப்புகளின் ஒருங்கிணைந்த வேண்டுகோள் வழிபாட்டு முறைகள், ஐயப்ப பத்தர்களிடையே குறிப்பிட்ட வண்ண ஆடைகள் அணிதல், ஐயப்ப பத்தர்கள் ஆங்காங்கே கூட்டமாகச் சென்று வழிபாடு செய்தல், ஐயப்ப பத்தர்களின் குடும்பத்ததார் களிடையே புதிய பொலிவும், உயிர்த்துடிப்பு மிக்க நட்பும், தோழமையும் பசுமையாக செழித்து வளர்தல்; ஐயப்பன் பத்தர்கள் மலைக்கு சென்று திரும்பும் போது வழி நெடுக உள்ள கோயில்களுக் கெல்லாம் சென்று கும்பிட்டு வேண்டுகோள் செய்து வழிபாடுகள் நிகழ்த்தி தங்களுடைய ஐயப்ப பூசையை நிறைவு செய்து திரும்புகின்ற பழக்கம்.... முதலியவைகள்தான்; இந்து மதத்தவர்களுக்கிடையே மறு மலர்ச்சியையும், வள வளர்ச்சியையும், எழிச்சி மிக்க செழிச்சியையும் உருவாக்கி வருகின்றன. அதாவது, இந்துக்களிடையே இந்துவேத உணர்விலும், நம்பிக்கையிலும், இந்துமத பயிற்சிகளிலும், முயற்சிகளிலும், விழிச்சி நிலை புத்துணர்ச்சியோடு உருவாகி வருகிறது என்ருல்; அதற்குக் காரணம், இந்த கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மூன்று மாதங்களில் நிகழ்த்தப்படுகின்ற

ஐயப்பன் பூசை, ஐயப்பன் வழிபாடு, ஐயப்பன் கும்பிடு, ஐயப்பன் வேண்டுதல் ... முதலியவைகள்தான்.

இப்பேருண்மையினை உணராமல், இந்துமதத்தில் உள்ள போலிகளும், ஏமாளிகளும், அப்பாவிகளும், நாத்திகர்களும், மாற்றுமத கங்காணிகளும், பிறரிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு செயல்படுகின்ற இந்துமத விரோதிகளும், துரோகிகளும், இந்த ஐயப்பன் பூசையை எதிர்த்தும், மறுத்தும், வெறுத்தும், பகைத்தும், நகைத்தும், கேலி கிண்டல் செய்தும்... தொடர்ந்து செயல் பட்டு வருகிறுர்கள். இம் முயற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று நெடுங்காலமாகப் பலரும் பதினெண்சித்தர் மடத்தில் வேண்டுகோள் விடுத்தும் வந்திட்டார்கள். அவர்களின் இடையருத தொடர் வேண்டுகோளின் பயனுகத்தான், இந்நூல் எல்லோரும் படிப்பதற்கு ஏற்ற வண்ணம் சிறிய நூலாக வெளிவருகிறது.

இன்றைக்கு நாட்டு நடப்பில் ஐயப்பன் பற்றி கூறப்படுகின்ற புராண இதிகாசச் செய்திகள் மிகமிக பிற்காலத்தவையாகும். *[சமசுகிருத மொழியில் உள்ள]* விட்ணு புராணம், , பாகவதம் என்ற இரண்டு புராணங்களிலும் சுப்ர பேதாகமம், காரணுகமம், அம்சுபேதாகமம் என்ற நூல்களிலும் மட்டும்தான்; இன்றைக்கு ஐயப்பன் பற்றி கூறப்படுகின்ற கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. இவைபற்றி இனிமேலாவது ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

ஐயப்பனுடைய உண்மையான மேன்மையான பயன்மிக்க வரலாற்றுச் செய்திகள், சாத்தர, சாத்திர, சாத்திறச் செய்திகள், வழிபாட்டு சடங்கியல்கள்... முதலியவைகள்தான்; இன்றைய ஐயப்பன் பத்தர்களுக்கு மிகச் சிறந்த ஊக்கத்தையும், ஆக்கத்தையும் தரும் என்பதை கருத்தில் கொண்டே; இந்துமத நூல்களிலிருந்தும், இந்து மதத்திற்கு அடிப்படையான இந்து வேதாகம நூல்களிலிருந்தும், இந்து வேதாகமத்திற்கு அடிப்படையான மணுநீதி நூல்களிலிருந்தும் உடனடியாக ஐயப்ப பத்தர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய செய்திகள் மட்டும் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுவதுடன்; காயந்திரி தோத்தர, தோத்திர, தோத்திறங்களும், காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களும் வெளியிடப் படுகின்றன பதினெண் சித்தர் மடத்தால்.

இன்றைக்கு இந்துக்களிடையே ஐயப்ப பத்தர்களிடையேதான் இந்துமத உணர்வும், ஈடுபாடும், நம்பிக்கையும், பற்றும், பாசப்

பிடிப்பும் செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே, இந்த நூலிலேயே ஐயப்ப பத்தர்களுக்கு இந்து மதம் பற்றியும், இந்து வேதம் பற்றியும், இவற்றிற்கு அடிப்படையான மணுநீதி பற்றியும் ஒருசில கருத்துக்கள் வெளியிடப் படுகின்றன. இவற்றை பதினெண் சித்தர் மடத்திலும், பீடத்திலும், கருகுலத்திலும் முறையான பயிற்சிகளை நிறைவாகப் பெற்றுத் தயாரான சித்தர்கள் இருக்கிறுர்கள். எனவே, ஐயப்ப பத்தர்கள் இவற்றைப் படித்து இந்து மத மறு மலர்ச்சிக்காகவும், வள வளர்ச்சிக்காகவும், ஆட்சி மீட்சிக்காகவும் பாடுபட முன்வர வேண்டும் என்று அறிவிப்பு அழைப்பு விடுத்துக் கொள்ளு கின்றேம்.

“இந்து வேதமும், இந்துமதமும் தழைக்க, பிழைக்க, உழைக்க அழைக்கிறேம் உங்களை”

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**குவலய குருபீடம், ஞாலகுரு குருமகாசன்னிதானம் அந்தணர் அண்ணல் ஞாணச்சாரியார்**

# மணுநீதி நூல்களின் சிறப்பும் ஐயப்பன் விரத பூசையும்

*சித்தர் ஊழித்தாண்டவர், சென்னை*

அணுதிகாலம் எனப்படுவது (4,85,920) நான்கு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ஆண்டுகள் எனும் மிகப்பெரிய காலமாகும். இக்கால இடைவெளியில் அண்ட பேரண்ட அருளாட்சி நிகழ்த்துகின்ற மூலப் பதினெண் சித்தர்கள் இம் மண்ணுலகுக்கு அனுப்பிட்ட ‘மணுநீதியார்’ எனப்படும் அணுதிசிவன்கள் நூருயிரக் கணக்கில் இம்மண்ணுலகுக்கு வந்து செயல்படுத்திட்ட சட்டதிட்ட கட்டுப்பாட்டு நெறிமுறைகள் மணுநீதி ஆகும்.

அதாவது, இம்மண்ணுலகில் இயற்கையாகத் தோன்றிட்ட பயிரினங்களோடும், உயிரினங் களோடும் கலந்து தோன்றிய ‘மணீசர்களை’ (மண் + ஈசர் = மணீசர் = மண்ணின் தலைவர்) பக்குவப் படுத்துவதற்காக, பண்படுத்துவதற்காக, அண்ட பேரண்டங்களிலிருந்து அனுப்பப்

பட்டிட்ட மணுநீதியார் எனப்படும் அஞுதிசிவன்கள் வழங்கியதே 'மணுநீதி' ஆகும். இம்மணுநீதி என்பது 1.நேமம், 2.இணைநேமம், 3.துணைநேமம், 4. நியமம், 5.இணை நியமம், 6.துணைநியமம், 7.நிடதம், 8.இணைநிடதம், 9.துணைநிடதம், 10.நிட்டை, 11.இணைநிட்டை, 12.துணைநிட்டை, 13.நீதி, 14.இணைநீதி, 15.துணைநீதி, 16. விதி, 17.இணைவிதி, 18.துணைவிதி எனும் பதினெட்டு நூல்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும்.

மணுநீதியின் இப்பதினெட்டு நூல்களிலும் எல்லாவகையான கடவுளர்களையும் பூசைசெய்து வழிபட்டு; அக்கடவுளர்களின் அருளைப் பெறுவதற்குரிய வழிவகைகள் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றில், **'ஐயன், ஐயர், ஐயா, ஐயப்பன், ஐயனூர் முதலியோர்களின் அருளைப் பெறுவதற்கு விரதங்களும், திருவிளக்குப் பூசைகளும், கலசபூசைகளுமே சிறந்தவை"** என்ற கருத்து வலியுறுத்தப் படுகின்றது. அதுமட்டுமல்ல, 'கார்த்திகை, மார்கழி, தை' என்ற மூன்று மாதங்களில் செய்யக்கூடிய விரத பூசை ஆண்டு முழுவதும் பயனளிக்கக் கூடியது' என்று மணுநீதி நூல்கள் வற்புறுத்துகின்றன.

அதற்குரிய மனப்பக்குவம் மக்களுக்கு ஏற்படுவதற்காகத்தான் ஊர்தோறும் ஐயன் கோயில்கள், ஐயர் கோயில்கள், ஐயப்பன் கோயில்கள், ஐயனூர் கோயில்கள் கட்டப்பட்டு அன்றாடப் பூசையும், வாரப்பூசையும், மாதப் பூசையும், ஆண்டுப் பூசையும் செய்யப்பட்டு வருகின்றன. அதாவது, **இந்துக்கள் ஐயன், ஐயர், ஐயா, ஐயப்பன், ஐயனூர் எனும் ஐவரையும் பூசை செய்வதின் மூலம் எளிதாக அருளுலகப் பொருளுலக பாதுகாப்பைப் பெறுகிறார்கள்; ஏற்படக் கூடிய எல்லா பாதிப்புக்களையும் அகற்றிக் கொள்கிறார்கள்**. இவைபற்றி மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறிடத்தான், பதினெண்சித்தர் மடத்தின் இந்து வேதாகமப் பாடசாலை பாடுபட்டு வருகிறது.

இப்பேருண்மையினை இன்றுள்ள நமது இந்துக்கள் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து நம்பி, ஒப்புக்கொண்டு, ஏற்றுச் செயல்படுத்திட்டால்தான் இந்துமத மறுமலர்ச்சிப் பணியும், இந்துமத வளவளர்ச்சிப் பணியும்,

இந்துமத ஆட்சி மீட்சிப் பணியும் முழுமையான வெற்றி பெறமுடியும் என்பதைக் கூறி எமது அறிமுக உரையை நிறைவு செய்கிறோம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

# இந்துவேத நூல்களின் சிறப்பும் ஐயப்பனும்

*சித்தர் பொன்ஞக்கீசர்*

*காஞ்சிபுரம்*

இந்து வேதத்தை இம் மண்ணுலகுக்கு அருளிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியாகவும், இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாகவும், இந்துமதத்திற்குரிய நாற்பத்தெட்டு (48) வகைப் பட்ட அருட் கலைஞர்களை உருவாக்குகின்ற கருகுலத்தின் ஆதீனமாகவும், ஆதிசிவனுரின் குருபாரம்பரியத்தில் வருகின்ற கருமூலப் பண்டாரமாகவும், அருளாட்சிப் பணியாற்றுகின்ற அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள்; ஐயப்ப பத்தர்களுக்காக அருளுகின்ற இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பினை பெற்றதற்கு யாம் பெரிதும் மகிழ்கின்றோம்.

இந்த சிறிய புத்தகம் இந்துக்களிடையே 'ஐயப்ப பத்தி'யை நன்கு செழித்தோங்கும் படிச் செய்யும் என்று முழுமையாக நம்புகிறோம் யாம். எனவே, **ஐயப்பன் வழிபாட்டில் சத்தி, சித்தி பெறுவதற்குரிய காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்கள் இந்து வேதத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப் பட்டு; ஐயப்ப பத்தர்களுக்காக ஒரு தனி நூலாக வெளியிடப் பட்டிருக்கிறது** என்பதை எண்ணி இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடமான அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்களுக்கு எமது பணிவான நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். இதுபோல், நாட்டு நடப்பில் உள்ள 1.குடும்ப ஆண்டவர்கள், 2.குலதெய்வங்கள், 3.கிராமத்து தேவர் தேவதைகள், 4.நாட்டுக் கடவுளர்கள் எனப் படுபவர்களுக் குரிய காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்களும்; காயந்திரி தோத்தர, தோத்திர, தோத்திறங்களும் தனித்தனி நூல்களாக

வெளியிடப்பட வேண்டும் என்று அருட்கொடை வள்ளல், ஞானவேந்தர், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியாரை வேண்டிக் கொள்கிறோம் யாம்.

இன்றுள்ள இந்துக்களுக்கு, இந்துவேதம் என்றால் என்ன? அதில் எத்தனை நூல்கள் இருக்கின்றன? அதை எப்பொழுது எவரால் எந்த மொழியில் அருளப்பட்டது? முதன்முதலில் எங்கு அருளப்பட்டது?... என்ற வினுக்களுக்கு உரிய விடை தெரியாது, தெரியவில்லை, தெரிந்து கொள்ளும் விருப்பமும் இல்லை. இக்குறையை போக்குவதற் காகத்தான், நமது பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, நிறையக்ஞர், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள் 1.இந்துவேதாகம பாடசாலை நடத்தி வருகின்றார். 2.இந்துவேதாகம பொதுக் கூட்டங்களை நாடெங்கும் நிகழ்த்தி வருகிறார், 3.இந்து வேதாகம மாநாடுகளை அடிக்கடி நிகழ்த்தி வருகிறார். 4. இந்துவேதாகமங்கள் பற்றிய செய்திகளை ஒலிப் பேழைகளாக நூற்றுக் கணக்கில் தயாரித்து எல்லோருக்கும் வழங்கி வருகிறார். இப்பணிகள் சிறக்க பொதுமக்கள் தாராளமாக ஏராளமான உதவிகளை வழங்கிட முன்வர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம் யாம்.

இந்துவேதம் என்பது 1. நூற்றியெட்டு (108) பூசைமொழி நூல்கள், 2.நாற்பத்தியெட்டு (48) பூசைவிதி நூல்கள், 3. தொண்ணூற்றாறு (96) தத்துவ நூல்கள், 4. நூற்று நாற்பத்தி நான்கு (144) செயல் சித்தாந்த நூல்கள் என்று மொத்தம் முந்நூற்று தொண்ணூற்றியாறு (396) நூல்களைக் கொண்டது என்ற பேருண்மையினை மட்டும் இந்துக்களுக்கு எடுத்துக் கூறி, இந்துக்கள் எல்லோரும், ‘இந்துவேத நூல்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்’ என்ற அக்கறையையும், ஆர்வத்தையும் பெற்றிட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து இந்த அணிந்துரையை நிறைவு செய்கிறோம் யாம்.

“இந்துவேதமே உலக மக்களைக் காப்பாற்றும்”

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

# இந்துமத நூல்களின் சிறப்பு

*சித்தர் மூங்கிலடியார், சென்னை*

இன்றைக்கு இந்துக்களிடையே பற்றுணர்வையும், பத்தி யுணர்வையும், ஒற்றுமை யுணர்வையும் புதிய பொலிவோடும், வலிவோடும், வாலிப்போடும் பாதுகாத்து வருவது ஐயப்பன் பூசையேயாகும். இந்த ஐயப்ப பூசை ஆண்டு தோறும் 'கார்த்திகை, மார்கழி, தை' என்ற இந்த மூன்றே மூன்று மாதங்கள் மட்டும் நிகழ்வதாக இருந்தாலும், இந்துக்களிடையே, இந்துமதம் பற்றிய அக்கறையும், ஆர்வமும், விருப்பமும், ஈடுபாடும் பருவ மழையைப் பெற்ற பயிர் போல் பசுமையாகச் செழித்து வளர்ந்திட, வாழ்ந்திட உதவுகிறது.

இப்பேருண்மையினை எண்ணியே இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, பரபிறம்மம், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார் அவர்கள்; ஐயப்ப பூசை பற்றிய அரிய பெரிய சீரிய பேருண்மை -களையெல்லாம் மணுநீதியிலிருந்தும், இந்து வேதத்திலிருந்தும், இந்து மதத்திலிருந்தும் தகுந்த சான்றுகளோடும், ஊன்றுகளோடும் எடுத்துக் கூறி விளக்கும் பணியைத் துவக்கி இருக்கிருர். இப்பணியின் முதல் கட்டமாகத்தான், இந்த சித்தியெல்லாம் தரும் ஐயப்ப காயந்திரி மந்தர, மந்திர, மந்திறங்கள், ஐயப்ப தோத்தர, தோத்திர, தோத்திறங்கள் எனும் தலைப்பில் இச்சிறு நூல் வெளிவருகிறது. இதுபோல், நூற்றுக் கணக்கான நூல்கள் பதினெண் சித்தர் மடத்திலிருந்து வெளி வருகின்றன. எனவே, நாடு முழுவதும் உள்ள ஐயப்ப பத்தர்கள் மணுநீதியின் இந்து வேதமும், இந்துமதமும் பற்றிய அடிப்படைப் பேருண்மைகளைத் தெரிந்து கொள்ள முற்பட வேண்டும். அதாவது, ஐயப்ப பத்தர்கள் ஆண்டுதோறும், கார்த்திகை, மார்கழி, தை என மூன்று மாதங்கள் மட்டுமே மணுநீதியிலும், இந்துவேதத்திலும், இந்துமதத்திலும் வகுத்தளிக்கப் பட்டுள்ள **இந்துவின் பத்தி நெறிமுறை வாழ்க்கையை** முழுமையாக மேற்கொண்டு விட்டு; மற்ற ஒன்பது மாதங்களும் உலகியலாக மணுநீதியையும், இந்துவேதத்தையும் இந்து மதத்தையும் பெருமளவில் மறந்தும், துறந்தும் வாழ்ந்திடுகிருர்கள். இதனுல், இந்து சமுதாயம்

நிலையான விழிச்சியையும், எழிச்சியையும், செழிச்சியையும், உயர்ச்சியையும், ஆட்சியையும், மாட்சியையும் பெற்றிடுவதற்காக உரிய பயிற்சிகளை மேற்கொள்ளும் முயற்சிகள் தளர்ச்சியுற்று விடுகின்றன! தாழ்ச்சியுற்று விடுகின்றன! வீழ்ச்சியுற்று விடுகின்றன! ... இக்கவலைக்குரிய அவலநிலை தடுக்கப் பட்டாக வேண்டும் என்ற பொறுப்புணர் வோடுதான் இந்துவேத இந்துமதத் தலைமை ஆச்சாரிய குருபீடமான அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் 1.மனுநீதியில் உள்ள (18) பதினெட்டு நூல்கள் பற்றியும், 2.இந்துவேதத்தில் உள்ள முந்நூற்றுத் தொண்ணூற்ருறு (396) நூல்கள் பற்றியும், 3.இந்துமதத்தில் உள்ள (36) முப்பத்தாறு நூல்கள் பற்றியும் பொதுமக்களிடையே சுருக்க விளக்க குறிப்புகளை வழங்கும் பணியைத் துவக்கி யிருக்கிருர்.

இப்பணி அணிபெறும் பொருட்டு இந்துமதத்திற்குரிய நூல்கள் முப்பத்தாறின் பட்டியலை மட்டும் இங்குக் குறிப்பிடுகின்ருேம். அவை, 1.கருவாக்கு, 2.கருவாக்கியம், 3.கருவாசகம், 4.குருவாக்கு, 5.குருவாக்கியம், 6.குருவாசகம், 7. தருவாக்கு, 8.தருவாக்கியம், 9.தருவாசகம், 10.திருவாக்கு, 11.திருவாக்கியம், 12.திருவாசகம், 13.அருள்வாக்கு, 14.அருள் வாக்கியம், 15.அருள் வாசகம், 16.மருள்வாக்கு, 17.மருள்வாக்கியம், 18.மருள்வாசகம் என்றும்;

1.அத்தரம், 2.அத்திரம், 3.அத்திறம், 4.சாத்தரம், 5.சாத்திரம், 6.சாத்திறம், 7.சூத்தரம், 8.சூத்திரம், 9.சூத்திறம், 10.தோத்தரம், 11.தோத்திரம், 12.தோத்திறம், 13.நேத்தரம், 14.நேத்திரம், 15.நேத்திறம், 16.வேத்தரம், 17.வேத்திரம், 18.வேத்திறம் என்றும் இருபெரும் பிரிவுகளை உடையது.

மேற்குறித்த இந்துமத நூல்கள் முப்பத்தாறிலும் (36) ஐயப்பன் விரத பூசை, திருவிளக்குப் பூசை, கலச பூசை பற்றிய செய்திகள் எண்ணற்றுக் காணப்படுகின்றன.

எனவே, இந்துக்கள் இந்துமத நூல்களின் சிறப்பைப் புரிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறி எமது பரிந்துரையை நிறைவு செய்கிருேம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

# இந்துவேத வீழ்ச்சியே! ஐயப்ப வழிபாட்டின் வீழ்ச்சி! அதுவே இந்துக்களின் தாழ்ச்சி!

*சித்தர் யோகமுனி, வேம்படிதாளம்.*

ஐயப்ப பூசை வழிபாடு ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டுதோறும் கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மூன்று மாதங்களிலும் முறையாகக் கொண்டாடப்பட வேண்டும். அப்பொழுதுதான், “இந்துவேத சாத்தர, சாத்திர, சாத்திற நெறிமுறைகளின்படி மானுடர் வாழ்வதற்கென்று தேர்ந்தெடுக்கப் பட்ட இடங்களில் வாழும் மானுடர்க்கு எல்லா வகையான நலங்களும், வளங்களும், பாதுகாப்புக்களும் கிடைத்திடும்” என்று இந்துவேதம் குறிக்கின்றது.

இக்கருத்தை நினைவில் கொண்டு எல்லாக் கிராமத்து மக்களும் தங்கள் தங்களுடைய கிராமத்தின் தெற்கு எல்லையில் இருக்கின்ற ஐயப்பசாமி கோயிலுக்குச் சென்று வழிபடுவதின் சிறப்பையும், அவசியத்தையும், பயனையும் உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டும்.

மேலும், புதிய ஊர்கள் புதிதாக நகரத்தின் விரிவாக உருவாகிடும் புறநகர்கள் முதலியவைகளில் மக்களின் பாதுகாப்புக்காக ஏற்கனவே உள்ள ஐயப்பன்கள் கோவில்களிலிருந்து பிடிமண்ணும், கலசநீரும் கொண்டு வந்து புதிய ஐயப்பன் கோயில்கள் கட்டப்படும் பழக்கம் நடைமுறைக்கு வரவில்லை. அதாவது, இந்துவேதத்தில் ஏற்கனவே உள்ள ஊர் எல்லையைத் தாண்டி புதிதாக கிராமமோ, ஊரோ, நகரமோ தோற்றுவிக்கப் பட்டால் முதலில் அந்தப் புதிய இடத்தின் தெற்குப் பகுதியில் ஐயப்பன் கோயில் கட்டப்பட்டாக வேண்டும். அதற்காக ஏதேனும் ஒரு பழைய ஐயப்பன் கோயிலிலிருந்து பிடிமண்ணும் கலசநீரும் கொண்டு வரவேண்டும். இதற்காக, யாமவேத முறைப்படி ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி எனும் ஐந்தில் ஏதேனும் ஒன்றையாவது ஐயப்பன் கோவிலிலும், புதிதாகக் கட்டும் ஐயப்பன் கோயிலிலும் செய்தாக வேண்டும். அப்பொழுதுதான், தனிமனிதர்களுக்கு மன அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி, துணிவு,

தைரியம், வீரம், சுறுசுறுப்பு முதலியவைகள் தொடர்ந்து கிடைத்திடும். இதேபோல், புதிதாக உருவாகும் ஓர் ஊரிலுள்ள குடும்பங்களில் ஒற்றுமையும், பற்றும், பாசமும், அன்பும், உண்மையும், மகிழ்ச்சியும் தொடர்ந்து நிலைத்திடும்.

இதேபோல், "முறையாக ஐயப்பன் கோயில் கட்டப்பட்டு உருவாக்கப் பட்டிடும் 1.பட்டி, 2.தொட்டி, 3.குக்கிராமம், 4.கிராமம், 5.ஊர், 6.நகரம் ... முதலியவற்றில் உள்ள குடும்பத்தார்களுக்கிடையே நட்பும், தோழமையும், ஒற்றுமையும், உண்மையான அன்பும், உறவும் வளர்ந்தோங்கி ஊரார் அனைவரும் ஒன்றுகூடி நல்வாழ்வு வாழ்ந்திட முடியும். இல்லையேல், பல்வேறு வகையான தொல்லைகளும், துன்பங்களும், வருத்தங்களும், அழிவுகளும், இழிவுகளும், இழப்புகளும்... தொடர்ந்து தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும், ஊராரின் வாழ்விலும் விளைந்திடும்" என்று இந்துவேதம் குறிப்பிடுகிறது.

இப்படி இந்துவேதம் கிராமத்து காவல்கார தேவர், தேவதைகள் பற்றிக் கூறுகின்ற இடத்தில் 1.ஐயப்பன், 2.முனியப்பன், 3.கருப்பன், 4.முத்தையா, 4.வேட்டைக்காரன், 6.ஆண்டி, 7.வீரன், 8.காரணமூர்த்தி, 9.சந்நாசி... முதலிய பல தெய்வங்களின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களுக்குக் குறிப்பிட்ட இடங்களில் இந்து வேதாகமப் படியும், இந்துவேத மீமாம்சையின் படியும் கோயில்கள் கட்டிய பிறகுதான் புதிய கிராமங்கள், ஊர்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. இவற்றை யெல்லாம் கடைப் பிடிக்காமல், இந்து வேதத்திற்கு வீழ்ச்சியை உண்டாக்கிச் செயல் பட்டதால்தான், இந்துக்களுக்கு தாழ்ச்சி ஏற்பட்டது என்பதை மட்டும் எடுத்துக் கூறி எமது சிறப்புரையை நிறைவு செய்கிறோம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

**கூட்டு வழிபாட்டுப் பூசை குடும்பத்தைக் காக்கும்!**

**திருவிழாப் பூசை ஊரைக் காக்கும்!**

# ஐயப்பன் கூட்டு வழிபாடு

எனவே, ஒவ்வொரு ஊராரும், ஐயப்ப பத்தர்களும் கார்த்திகை, மார்கழி, தை எனும் மூன்று மாதங்களிலும் காலையிலும், மாலையிலும் தங்கள் தங்கள் ஊருக்குரிய அல்லது தங்கள் தங்களுடைய வட்டாரத்து எல்லைகளுக்குரிய ஐயன் கோயில், ஐயர் கோயில், ஐயா கோயில், ஐயனுர் கோயில், ஐயப்பன் கோயில் சென்று கூட்டு வழிபாடு செய்து தங்களுக்குத் தேவையான எல்லாப் பாதுகாப்புகளேயும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மனுநிதி விளக்கமாகக் கூறுகிறது.

**வழிபாட்டு முறை:-**

அ) கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்ளும் ஐயப்ப பத்தர்கள் அனைவரும் தனித்தனியாக படையல்கள் செய்யாமல், எல்லோருடைய வீடுகளிலிருந்து குறிப்பிட்ட அளவு அரிசி, பருப்பு முதலியவற்றைப் பெற்று கூட்டாக பொங்கல் செய்து படைக்க வேண்டும். இது போலவே, எந்தப் படையலாக இருந்தாலும் சரி, அனைவரும் சேர்ந்து கூட்டாகத்தான் செய்ய வேண்டும்.


ஆ) கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்ளும் ஐயப்ப பத்தர்கள், அவர்கள் வீட்டிலுள்ள பெண்கள், குழந்தைகள் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து திருவிளக்குகள், மஞ்சள் நீர்க்கலசங்கள் கொண்டு வந்து கோயிலில் வைத்து கூட்டு வழிபாடு செய்து முடித்து திரும்பவும் வீட்டிற்கு எடுத்துச் சென்று பூசையறையில் வைத்து தினமும் காலை, மாலை பூசை செய்து வரவேண்டும்.

இ) கூட்டு வழிபாட்டில் கலந்து கொள்ளும் ஐயப்ப பத்தர்கள் இந்து வேதத்தில் உள்ள ஐயப்பன் காயந்திரி மந்தரங்களேயும், மந்திரங்களேயும், மந்திறங்களேயும், அனுதிசிவன்களாகிய மனுநீதியார்கள் அருளிய மனுநீதியில் உள்ள ஐயப்பன் காயந்திரி தோத்தரங்களேயும், தோத்திரங்களேயும், தோத்திறங்களேயும் ஓதி வழிபாடு செய்ய வேண்டும்

***குறிப்பு:-***

*இந்தக் கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள ஐயப்பன் காயந்திரிப் பூசைமொழிகளேயும், மற்ற பூசாவாசகங்களேயும் குருதேவர் வெளியிட்ட பூசைமொழிப் புத்தகங்களில் காணலாம்.*

.



11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**



சென்னை, காரனோடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar.
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed at Kavin Printers, Madurai